மனிதம்

௯

கவிதைப் பேழை

# தேம்பாவணி

*– வீரமாமுனிவர்*

**நுழையும்முன்**

பசுந்தங்கம், புதுவெள்ளி, மாணிக்கம், மணிவைரம் யாவும் ஒரு தாய்க்கு ஈடில்லை என்கிறார் ஒரு கவிஞர். தாயின் அன்பை எழுத உலகின் மொழிகள் போதாது; தாயையிழந்து தனித்துறும் துயரம் பெரிது. மகிழ்ச்சியைப் பகிர்ந்தால் பெருகும்; துயரைப் பகிர்ந்தால் குறையும்; சுவரோடாயினும் சொல்லி அழு என்பார்களல்லவா? துயரத்தைத் தாங்கிக் கொள்ளும் மனங்கள் மனிதத்தின் முகவரிகள்! சாதாரண உயிரினங்களுக்கும் துயரத்தைப் பகிர்ந்து கொள்ளும் மனிதம் இருந்தால் எத்தனை ஆறுதல்!.

**முன்நிகழ்வு**

கிறித்துவிற்குமுன் தோன்றியவர் திருமுழுக்கு யோவான். இவரை அருளப்பன் என்றும் குறிப்பிடுவர். இவரே கிறித்துவின் வருகையை அறிவித்த முன்னோடி. வீரமாமுனிவர் தன் காப்பியத்தில் இவருக்குக் கருணையன் என்று பெயரிட்டுள்ளார். கருணையன் தன் தாயார் எலிசபெத் அம்மையாருடன் கானகத்தில் வாழ்ந்து வந்தார். அச்சூழலில் அவருடைய தாய் இறந்துவிட்ட போது கருணையன் அடையும் துன்பத்தில் இயற்கையும் பங்குகொண்டு கலங்கி ஆறுதல் அளிப்பதை இப்பாடல்கள் படம்பிடித்துக் காட்டுகின்றன.



இரங்கி அழும் கருணையனுக்கு இரங்கும் இயற்கை

## எலிசபெத் அம்மையார் அடக்கம், கருணையன் கண்ணீர்

1. *பூக்கையைக் குவித்துப் பூவே*
*புரிவொடு காக்கென்று அம்பூஞ்*
*சேக்கையைப் பரப்பி இங்கண்*
*திருந்திய அறத்தை யாவும்*
*யாக்கையைப் பிணித்தென்று ஆக*
*இனிதினுள் அடக்கி வாய்ந்த*
*ஆக்கையை அடக்கிப் பூவோடு*
*அழுங்கணீர் பொழிந்தான் மீதே.* 2388

**சொல்லும் பொருளும்**

சேக்கை – படுக்கை

யாக்கை – உடல்

பிணித்து – கட்டி

வாய்ந்த – பயனுள்ள